21.11.2025

DVC.7/2023

PW–1, தனலட்சுமி

(மனுதாரர் ஆஜர். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 6ம் வகுப்பு படித்துள்ளேன். திருமணத்திற்கு முன்போ பின்போ நான் வேலை பார்க்கவில்லை என்றால் சரிதான். ஜீவனாம்சம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சேர்ந்து வாழவும் கேட்டுள்ளளேன். எனக்கும் எதிர்மனுதாரராருக்கும் திருமணமாகி 2 ஆண் குழந்தை உள்ளது என்றால் சரிதான். மூத்த மகனுக்கு 24 வயதும் இளைய மகனுக்கு 19 வயதும் ஆகிறது. எதிர்மனுதாரர் வசம் தான் 2 பையன்களும் உள்ளார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தான் எனது மகன்களுக்கு அனைத்து செலவுகளையும் செய்து வருகிறார் என்றால் சரிதான். 17.10.2020ம் தேதி என் நகைகளை காணவில்லை என்று எதிர்மனுதாரராகிய எனது கணவரிடம் பிரச்சினை செய்தேன் என்றால் சரிதான். எனது சகோதரர் மற்றும் சகோதரனின் மனைவி வந்த அன்று தான் நகை காணாமல் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் சென்னைக்கு எனது கணவர் எனது சகோதருடன் அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். அப்போது நான் எனது நகைகளை சகோதரர் தான் எடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. இதுசம்பந்தமாக நான் எந்தபுகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 18.10.2020ம் தேதியிலிருந்து எனது கணவரை சந்திக்கவில்லை என்றால் சரிதான். அவர் என் மீது விவாகரத்து தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த கடந்த 5 ஆண்டு காலமாக நான் தனியாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவருடன் சேர்ந்து வாழ நான் எழுத்து பூர்வமான அறிவிப்போ வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5 ஆண்டுகாலமாக எனது இரண்டு மகன்களையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். பார்க்கவிடவில்லை. திருமங்கலம் காவல் நிலையத்தில் 2020 ல் நான் எனது கணவர் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகார் பொய்யான புகார் என்று காவல் ஆய்வாளர் சொன்னார். காவல் ஆய்வாளரே சொன்னதின் பேரில் நான் சென்னையில் இருந்தேன்

என்றால் சரிதான். அதன் பிறகு நான் காவல் ஆய்வாளரை பார்த்தேன். எனது கணவரையும் பார்த்தேன். ஆனால் அதற்குள் வீட்டை காலி செய்துவிட்டு சென்றுவிட்டார். 2020 முதல் 2025 வரை எங்கு குடியிருந்தேன் என்றால் 2021 வரை சென்னையிலும் 2022 முதல் தற்போது வரை திருமங்கலத்திலும் குடியிருந்து வருகிறேன். திருமங்கலத்தில் 3 வீடுகள் மாறியுள்ளேன். நானாக தான் வசதிக்காக வீடு மாறியுள்ளேன்.

நான் சார்பு நீதிமன்றத்தில் HMOP. No. 179/2020 வழக்கில் இடைக்கால பராமரிப்பு மனு தாக்கல் செய்து அந்த மனுவில் மாதம் ரூ.7000/- இந்த வழக்கில் எதிர்மனுதாரரை தரச்சொல்லி உத்தரவிட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடைக்கால பராமரிப்பு உத்தவின் பேரில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் அதனை இடைக்கால விதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் நான் குடியிருக்கும் வீட்டில் எனது கணவர் எவ்வித பிரச்சினையும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கடந்த 5 வருடமாகவும் எனது உடல் உழைப்பின் மூலம் நான் சம்பாதித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவர் இரண்டு மகன்களையும் படிக் கவைப்பதற்கும் இதர பராமரிப்பு செய்வதற்கும் அதிக செலவுகள் செய்தார் என்றால் சரிதான். எனக்கு பராமரிப்பு வாங்க மட்டுமே நோக்கம் என்றாலும் எனது கணவரையோ எனது பிள்ளைகயோ பார்க்க விருப்பம் என்றால் சரியல்ல. எனக்கு எனது கணவர் உடல் ரீதியாகவோ மனரீதியாகவோ எவ்வித தொந்தரவும் தரவில்லை என்றால் சரிதான்.

நான் பல நபர்களிடம் கடன் வாங்கி அந்த கடன்களை எனது கணவர் தான் அடைத்தார் என்றால் சரியல்ல. கவிதா என்பவர் நான் கடன் வாங்கி அதன் பேரில் என் மீது அவர் புகார் கொடுத்து அந்த கடனை எனது கணவர் தான் அடைத்தார் என்றால் சரிதான். எனது கணவர் எனது தம்பிக்கு கடை வைத்து கொடுப்பதற்காக ரூ.1,50,000/- லட்சம் கொடுத்தார் என்றால் சரிதான். எனது கணவர் நல்லவர் என்றாலும் நான் தான் எனது தவறான பழக்கத்தில் அவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் நான் கேட்ட எந்த பரிகாரமும் சட்டப்படி எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.